**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 20.11.2025

அசல் வழக்கு எண். 326/2023

வா.சா. 1 – ஏகாம்பரம், த/பெ. முருகேசன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு எதற்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 74 சென்டில் நான் பயிர் செய்வதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்ன பரிகாரம் வழக்கில் கோரி உள்ளார்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்து உங்களுக்கு எப்படி வந்தது என்றால் என் தாய் மாமனிடம் இருந்து பாகமாக கிடைத்தது. அது மொத்தமாக கிடைத்ததா என்றால் எனக்கு 18 செண்டும் என்னுடைய தம்பிக்கு 18 செண்டும் ஒதுக்கப்பட்டது. மேற்படி இரண்டு 18 சென்ட்களும் நீங்கள் இருவரும் ஒரே பத்திரமாக சேர்ந்து வாங்கினீர்கள் என்றால் சரிதான். 18 மற்றும் 18 ஆக மொத்தம் 36 சென்ட் போக 74 சென்டில் மீதி இருக்கும் நிலம் யாருடையது என்றால் என்னுடைய அம்மா குமாரி என்பவருக்கு சொந்தமானது ஆகும். 74 சென்டில் உங்களுக்கு சேர வேண்டிய 18 சென்ட் பிரித்து கொடுத்தால் போதுமா என்றால் என்னுடைய பாட்டன் சொத்திலும் பாகம் உள்ளது. உங்கள் பாட்டன் வீட்டு சொத்து எத்தனை ஐட்டம் சொத்து எவ்வளவு சொத்து என்றால் ஞாபகம் இல்லை. சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் பாட்டன் சொத்து உங்களுக்கும் உங்கள் தம்பிக்கும் உங்கள் தகப்பனார் பிரித்துக் கொடுத்துவிட்டார் என்றால் பிரித்து கொடுக்கவில்லை. பிரித்துக் கொடுக்கும்படி நீங்கள் வழக்கில் 3 ஐட்டம் சொத்துக்களை சொல்லி உள்ளீர்கள் என்றால் 4 ஐட்டம் சொட்டுகளை சொல்லி உள்ளேன். தாத்தா சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்தீர்களா என்றால்

தாக்கல் செய்துள்ளேன். அதில் வழக்கு ஐட்டம் சொத்து சேர்க்கவில்லை என்றால் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். நீங்கள் எத்தனாம் வகுப்பு படித்து உள்ளீர்கள் என்றால் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன் வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகளை படித்து காட்டினாரா என்றால் படித்துக் காட்டினார். வழக்கு சொத்து சர்வே எண் தெரியாது என்று சொல்லிவிட்டீர்கள் அதனுடைய சர்வே எண் 339/3 என்றால் சரிதான். நீங்கள் வழக்கில் கோரி உள்ள எதிர்பாத்திய கோரிக்கை உங்களுக்கு வழங்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிர்பாத்தியத்துக்கு நீங்கள் தனி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியில்லை. 74 சென்டில் நீங்கள் 18 சென்ட் அனுபவித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். அது கால்வாய் ஒட்டிய பகுதி என்றால் சரிதான். அதற்கு வடக்கு பக்கமாக உங்கள் தாயார் சொத்தும் தம்பி சொத்தும் உள்ளது என்றால் சரிதான். அந்த கால்வாயில் இருந்து தண்ணீர் செல்ல வேண்டுமாயின் உங்கள் நிலம் வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அது வடக்கு தெற்காக பிரித்தால் அனைவருக்கும் கால்வாயில் இருந்து நேரடியாக தண்ணீர் கிடைக்கும் என்றால் சரி இல்லை. உங்கள் கழனி வழியாக தண்ணீர் செல்கிறது அவர்களும் பயிர் செய்கிறார்கள் என்றால் சரிதான். நீங்கள் முதல் வாதியின் மகன் என்றால் சரிதான் உங்களுக்கிடையே குடும்ப பிரச்சினை உள்ளது என்றால் சரிதான் இரண்டாவது சகோதரர் தம்பி என்றால் சரிதான். அவருக்கு திருமணம் நடைபெறவில்லை என்றால் நடைபெற்றது வாழவில்லை.ஆகவே தம்பி அப்பா அம்மா உடன் இருக்கிறார் நீங்கள் தனியாக குடும்பமாக இருக்கிறீர்கள் என்றால் சரிதான். உங்கள் மனைவியும் உங்கள் தாயாரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள் என்றால் என் தாயார் தான் மனைவியை அடித்து விடுவார். உங்கள் அம்மாவுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 58 வயது

இருக்கும். உங்களுக்கு என்ன வயது என்றால் 47 இருக்கும். உங்கள் மனைவியுடன் சண்டை போடும் அளவிற்கு உங்கள் தாயாருக்கு வலு இல்லை என்றால் அவர் அடித்து விட்டு அவரே சென்று காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுப்பார். குடும்ப பிரச்சினையை மனதில் வைத்துக் கொண்டு வழக்கு சொத்துக்கு தண்ணீர் விட மறுக்கிறீர்கள் என்றால் சரியில்லை. வழக்கு சொத்தில் கால் பாகம் உங்களுக்கும் முக்கால் பாகம் தம்பி அம்மா ஆகியோருக்கு சொந்தமானது என்றால் சரிதான். உங்களுக்கு பிரித்துக் கொடுக்க சம்மதம் இல்லை என்றால் பிரித்துக் கொடுக்க தான் கேட்டு உள்ளேன். நீங்கள் சர்வேயர் அழைத்து வந்து அளக்க நீங்கள் ஆட்சேபனை செய்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீதிமன்றம் மூலமாக பிரித்துக்கொள்ளலாமா என்றால் தெரியாது. உங்கள் அப்பா உங்கள் அம்மாவுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார்கள் தெரியுமா என்றால் தவறானது ஆகும். பதிவு செய்யப்பட்ட பத்திரம் தவறு என்று கூற உங்களுக்கு அருகதை இல்லை என்றால் சரியில்லை. நீங்களும் உங்கள் தம்பியும் உங்கள் தாய்மாமன் பிள்ளைகளிடமிருந்து கிரயம் வாங்கினீர்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. கடந்த 2022 ஆண்டு நீங்கள் மீண்டும் ஒரு காவல் நிலைய புகார் கொடுத்துள்ளீர்கள் அதற்கு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. நீங்கள் மாவட்ட ஆட்சியரிடம் ஒரு புகார் கொடுத்தீர்கள் அதற்கு ரசீது கொடுத்தார்கள் அதனை வைத்து உள்ளீர்களா என்றால் எங்கு வைத்தேன் என்று ஞாபகம் இல்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ஆட்சேபனை கடிதம் கொடுத்து அதனை எதற்காக கொடுத்தீர்கள் என்றால் பாட்டன் சொத்தினை விற்பனை செய்வதாக சொன்னார்கள் ஆகவே ஆட்சேபனை கடிதம் கொடுத்தேன். ஒரு சொத்துக்கு

பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் நீங்கள் நான்கு சொத்துக்கு பாகப்பிரிவினை கோரி எதிர்பாத்திய வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் அவ்வாறு நீதிமன்றத்தில் கோரமுடியாது என்றால் சரியில்லை. வழக்கு சொத்து தனிப்பட்ட சொத்து அந்த வழக்கு உடன் கூட்டுக் குடும்ப சொத்து பாகம் கோரர முடியாது என்றால் சரி இல்லை. உங்களுக்கு எந்த நிவாரணமும் நீதிமன்றம் வழங்காது என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram